பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரேமாதூத ஹூ ஐப்பசி மீ 27 உ. செவ்வாய்க்கிழமை (13 11 1990) ஹிஜ்ரி 1410 ற ஆகிர் 3 கதிர் 251

# 8 மாதங்களுக்குரிய மருந்து ஆஸ்பத்திரிக்கு வரவில்லை!

## நோயாளர்கள் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 13

யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு — கடந்த எட்டு மாதங்களுக்குரிய — மருந்து வகைகள் எதுவும் இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை.

அதனால் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு காலாண்டு ரீதியில் மருந்துகள் ஒதுக்கப்படுவது வழக்கம். யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு 1990 ஆம் ஆண்டின் முதற் காலாண்டுக்குரிய மருந்து வகைகள் கடந்த ஜூன் மாதம் வரை முற்றாக அனுப்பப்பட்டிருக்கவில்லை. அவற்றில் ஒரு பகுதியே இப்போது கப்பல்மூலம் கொண்டு வரப்படுகிறது.

இவ் வருடத்தின் மிகுதி மூன்று காலாண்டுகளுக்கும் உரிய ஒதுக்கீடுகளில் சிறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் 2,000 பேருக்குச் சிகிச்சை!

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ். ஆஸ்பத்திரி மீளத் திறக்கப்பட்ட பின்னர் நேற்று மட்டும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்றனர்.

கிளினிக்குகளில் சுமார் ஆயிரம் பேரும், வெளி நோயாளர்கள் பிரிவில் சுமார் 900 பேரும் சிகிச்சை பெற்றனர். நேற்று மாலைவரை 100 பேர் வார்ட்டுகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் சகல கிளினிக்குகளும் இயங்கத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ-3)

## தீவுப் பகுதி மக்களுக்கு விரைவில் அம்புலன்ஸ் படகு

### செஞ்சிலுவை அதிகாரி உறுதி

தீவுப்பகுதி மக்களுக்கு உதவும் வகையில் ''அம்புலன்ஸ்'' படகு ஒன்று அடுத்த மாதம் அளவில் வழங்கப்பட இருக்கிறது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த செஞ்சிலுவைச் சங்க இலங்கைக் குழுத் தலைவர் திரு. நயோகி கொக்காவவிடம் யாழ் - செஞ்சிலுவைச் சங்கம் விடுத்த கோரிக்கையை அடுத்துஇந்தப்படகு கிடைக்க இருக்கிறது.

அம்புலன்ஸ் படகை அவசர உதவியாக தாம் விரைவாக அனுப்ப ஆவன செய்வதாக திரு நயோகி தெரிவித்துச் சென்றுள்ளார்.

இதே சமயம் —

தீவுப் பகுதி மக்களின் போக்குவரத்து வசதிக்காக புனர்வாழ்வு அமைச்சால் ஏற்கனவே வழங்கப்பட்ட இரு படகுகளும் கடற்படையினரின் பாதுகாப்பிலேயே உள்ளன. (ஓ-3)

## மணியம்தோட்டம் பகுதியில் பொம்மர், அவ்ரோ குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணம், மணியம்தோட்டம் (உதயபுரம்) பகுதியில் நேற்று அதிகாலை 5-45 மணியளவில் அகோர விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொம்மர், அவ்ரோ, ஹெலி என்பன அடுத்தடுத்து குண்டு வீச்சு, ரொக்கட் தாக்குதல்களை நடத்தின.

இந்தத் தாக்குதல்களினால் ஒரு வீடும், கடையும் தரைமட்டமாகின, பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. சுமார் பத்துப் பேர் காயங்களுக்கு ஆளாகினர்.

உதயபுரத்தைச் சேர்ந்த ரி. ரெஜினா (13 வயது) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொம்மர் 4 குண்டுகளை வீசியது அவ்ரோ 5 பீப்பாய்க் குண்டுகளை வீசித் தள்ளியது. அதில் ஒன்று வெடிக்கவில்லை.

தென்னந் தோப்புக்குள் விழுந்த சில குண்டுகளினால் அங்கிருந்த பல மரங்கள் முறிந்தும், சரிந்தும் வீழ்ந்தன.

அதிகாலை நடந்த இந்தத் தாக்குதலினால் அப்பகுதி மக்கள் கதிகலங்கி நாலாபுறமும் சிதறி ஓடினர். பதற்றத்தில் அங்கும் இங்கும் ஓடி விழுந்ததிலும் சிலர் காயமடைந்தனர்.

சிலர் மூட்டை, முடிச்சுகளுடன் அங்கிருந்து அவசர அவசரமாய் வெளியேறினர்.

மணியம் தோட்டத்தை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் நகர மக்களும் பதற்றம் அடைந்தனர். (ஓ-3)

## திருமலையில் தேடுதல்; மோதலில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், நவ. 13

திருமலை மாவட்டம் சலப்பையாறு, கும்புறுப்பிட்டிப் பகுதிகளில் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேடுதலின்போது இப்பகுதிகளில் மோதல்களும் இடம் பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று நடந்த மோதல் ஒன்றில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் மற்றும் இருவர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ)

## ராமர் ஆலயப் பிரச்சினை; சந்திரசேகருக்கு காலக்கெடு

புதுடில்லி, நவ. 13

அயோத்தியில் ராமர் ஆலயம் கட்டுவது தொடர்பாக இரண்டாவது கட்டப் போராட்டத்தை அடுத்த மாதம் ஆறாம் திகதி ஆரம்பிக்கப் போவதாக விஸ்வ இந்து பரிஷத் நேற்று அறிவித்தது.

இத்திகதிக்கு முன்னர் சந்திரசேகர் தலைமையிலான அரசாங்கம் ராமஜன்ம பூமி பிரச்சினைக்குத் திருப்திகரமான தீர்வு ஒன்றைக்காண வேண்டும் என்று விஸ்வ இந்து பரிஷத்தின் பொதுச் செயலாளர் அசோக் சிங்கால் தெரிவித்தார்.

இதேவேளை—

திரு. சிங்கால் பிரதமர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமது முடிவைப் புலிகள் மீது திணிக்க முயன்ற ராஜீவ்!

### அதில் தோற்றுப் போனார் என்கிறார் கருணாநிதி

சென்னை, நவ. 13

தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளைத் தமது வழிக்குக்கொண்டுவந்து சில முடிவுகளை அவர்கள்மீது திணிக்க முயன்றார் திரு. ராஜீவ் காந்தி. ஆனால் அதற்கு அவர்கள் மசியவில்லை.

அந்தக் காழ்ப்புணர்வினாலேயே தாம் ஒரு முன்னாள் பிரதமர் என்பதையும் மறந்து திரு. காந்தி, தமிழகத்தையும் விடுதலைப் புலிகளையும் சம்பந்தப்படுத்தி ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகிறார்.

இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

திரு. ராஜீவ் காந்தி அண்மையில் தமது லோகசபைப் பேச்சொன்றில் தமிழக அர[illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை சாகாமத்தில் புலிகள் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 13

அம்பாறை மாவட்டத்தில் சாகாமத்தில் உள்ள இராணுவ முகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் கால்காஸ்ட்ரோ ஷெல் தாக்குதல் நடத்தியதாகவும் தொடர்ந்து முகாமைநோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவில்லை என்[illegible] லைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## யாழ்நகர் நாளுக்குநாள் கலகலப்புக் காண்கிறது!

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ் நகரம் நாளுக்கு நாள் கலகலப்படைந்து வருகிறது.

நகரில் ஆஸ்பத்திரி இயங்கத் தொடங்கியதைத்தொடர்ந்து மக்கள் நடமாட்டமும் அதிகரித்துள்ளது

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மருந்துக்கடைகள் இப்போது திறக்கப்பட்டுள்ளன. நகரில் அனேக ஹோட்டல்களும் இயங்கத் தொடங்கியுள்ளன.

இதேவேளை —

நகரில் சேதமடைந்த கடைகளைத் திருத்தும் வேலைகளும் ஆரம்பமாகி உள்ளன. (ஓ 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## யாருக்கு உதவி?

வவுனியா மாவட்டத்தில், ஒரு மைல் விஸ்தீரணத்துக்கும் குறைவாக உள்ள நகரப் பகுதி மட்டும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே தமிழர்கள் வாழ்கிறார்கள். தமிழர்கள் நகரத்திற்குள் போவதற்கும் வருவதற்கும் இராணுவத்திடம் அனுமதிப் பத்திரம் பெறவேண்டும்!

இராணுவத்தின் இத்தகைய சிவில் தர்பார்களுக்கும், இராணுவ அடாவடித்தனங்களுக்கும் அஞ்சி, அங்கிருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் நகருக்கு வெளியே, அதற்குத் தொலைவிலுள்ள கிராமப் புறங்களில். வசதிகள் குறைந்த குடியேற்றப் பகுதிகளில் அகதிகளாக வாழ்கின்றன.

வவுனியா நகரின் வடக்கு எல்லைக்கு இப்பால், உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் விதித்திருக்கும் தடைகளும், கட்டுப்பாடுகளும் எண்ணற்றவை.

இவற்றின் விளைவாக உணவு மற்றும் பாவனைப் பொருள்கள் வவுனியா நகரத்தின் வடக்கு எல்லைக்கு இப்பால் மிகக்குறைந்த அளவிலேயே கிடைக்கின்றன.

இதனால் பொதுவாக வடமாகாணம் முழுவதிலும் அதன் ஐந்து மாவட்டங்களிலும இராணுவத் தாக்குதல்களால் இடம்பெயர்ந்து அகதிகளான தமிழ் மக்களுக்குப் போதிய நிவாரணம் கிடைப்பதில்லை. அனுராதபுரத்திலும், பொலநறுவையிலும், புத்தளத்திலும் வழங்கப்படும் நிவாரணங்கள், புனர்வாழ்வு வசதிகளுடன் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழர்களுக்கு கிடைக்கும் நிவாரணங்கள், புனர்வாழ்வு வசதிகளை ஒப்பிட்டுப் பார்க்க நினைக்கவும் முடியாது.

அரசாங்கம் தமிழ் அகதிகளைப் புறக்கணித்து விட்டது. வெளி உலகுக்குக் காட்டுவதற்காக, அற்ப சொற்பத்தை அனுப்பிவருகிறது. மனிதாபிமான சிந்தையுடன் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களே தமிழ் அகதிகளின் அவலங்களை ஓரளவேனும் தீர்த்து வருகின்றன.

இத்தகைய ஒரு பின்னணியில், வவுனியா நகருக்கு வெளியே உள்ள தமிழ் அகதிகளுக்கு, தொண்டர் நிறுவனங்களின் உதவிகள் தடங்கல் செய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது இது தமிழ் அகதிகளுக்கு நிவாரணம் கிடைக்காமற் செய்யும் சூழ்ச்சி.

உதவி, எப்போதும் அது தேவைப்படுவோருக்கே வழங்கப்பட வேண்டும். இதனை தொண்டர் நிறுவனங்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. அவை அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டவை அல்ல. எனவே ஏற்கனவே உதவி கிடைப்போருக்கு மேலும் கொட்டிக் கொடுக்காமல், உதவி தேவைப்படும், அவலப்படும் மக்களுக்கு உதவத் திடசங்கற்பம் பூண வேண்டும். நிர்ப்பந்தம், நெருக்குதல்களுக்குத் தலை சாயாமல், தமது மனிதநேயப் பணியை சிறப்பித்துப் பெருமைப்படுத்தும் விதத்தில் தொண்டர் நிறுவனங்கள் செயலாற்றவேண்டும்.

# எத்தகைய அழிவுகள் வந்தாலும் விளைவுகளை வென்றே தீருவோம்

## மறுமலர்ச்சிக் கூட்டத்தில் யோகி

யாழ்ப்பாணம், நவ. 13

மிகுந்த நம்பிக்கையுடன் நாம் போராட்டத்தைநடத்துகிறோம். போராட்டத்தில் எத்தகைய அழிவுகள் வந்தாலும் அவற்றின் விளைவுகளை நாம் வெல்லுவாம் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு. எனவே மண்ணின் விடுதலைக்காக, மக்கள் அனைவரும் முழுமையாக இணைந்து, போராட்டத்துக்கு தமது ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்க முன்வர வேண்டும்.

இவ்வாறு அழைப்பு விடுத்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி. யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்றுக் காலை நடந்த மறுமலர்ச்சிக்கழககூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இன்றைய எமது போராட்டத்தால் குறுகிய காலத்திலேயே பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சமூக வேறுபாடுகள் உடைக்கப்பட்டிருக்கின்றன.

நாம் இன்று போராட்டத்தில் ஒரு மாறுபட்ட சூழலில் நிற்கிறோம். விடுதலைப் புலிகள் இன்று மரபுவழிப் படையாக வளர்ந்து வருகின்றனர். எனவே, இதற்கு மக்களின் பெருமளவிலான பங்களிப்புத் தேவை.

யுத்தத்தில் பல போராளிகள்மரணிக்கிறார்கள், காயப்படுகிறார்கள், அவர்களின் ஆயுதங்களை ஏந்த புதிய போராளிகள் வேண்டும் இந்த மன உணர்வு சகலரிடமும் உருவாக வேண்டும்.

### பேச்சில் வித்தியாசம்

எமது போராட்டத்தை மழுங்கடிக்கவே சில தனிமைக் கட்சிகளுடன் ஸ்ரீலங்கா அரசு பேசி வருகிறது.

அவர்கள் எதை விட்டுக் கொடுப்பது? என்று தான் பேசுகிறார்கள்.

ஆனால்நாம் எதையும் விட்டுக் கொடுக்க முடியாதுஎன்ற நிலையிலேயே பேசினோம்.

இதுதான் எமக்கும் மற்றவாகளுக்கும் உள்ள வேறுபாடு.

நாம் மன்னித்ததன் விளைவைச் சந்தித்தவர்கள், மன்னித்தவர்களே எம்மை அழிக்க முற்பட்டார்கள் வரலாறு கற்றுத் தந்த பாடம் அது.

ஆகவே, தான் எமது அமைப்பு விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகச் செயற்படும் எந்தஒரு துரோகியையும் மன்னிப்பதில்லை.

இப்படி அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி மாலினி பேசுகையில்—

போராட்டத்தில் இருந்து பிரிந்து வாழ முடியாது என்ற யதார்த்த நிலையை அனைவரும் புரிந்து கொண்டு எதிர் காலத்தை வளம்படுத்த போராட்டத்தில் தமது பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும்- என்று அழைப்பு விடுத்தார். (இ-6)

## கைதடியில் மகப்பேற்று விடுதி

யாழ்ப்பாணம், நவ. 13

கைதடி அரசினர் ஆயுள்வேத போதனா வைத்திய சாலையில் புதிதாக மகப்பேற்று விடுதி ஒன்று ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

இந்த மகப்பேற்று விடுதித் திறப்புவிழா நாளை புதன் கிழமை பிற்பகல் 1 45 மணி அளவில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. (இ-6)

## ஒரு லட்சம் பேருக்கு மேல் ஓய்வு பெற விண்ணப்பம்

கொழும்பு, நவ. 13

புதிய இளைப்பாற்றுத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற விண்ணப்பித்துள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

ஓய்வு பெறும் இந்த அரச ஊழியர் சுயதொழில் செய்ய கடனுதவி வழங்கவும் அரச வங்கிகள் முன்வந்துள்ளன. [இ-எ]

## மின்சாரசபை அலுவலகம் விரைவில் இடம் மாறும்

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ் அரசடியிலுள்ள மின்சாரசபையின் யாழ் பொறியியலாளர் அலுவலகத்திலுள்ள மின் உபகரணங்கள் மற்றும் பொருள்கள் மழை நீரில் நனைந்து காணப்படுகின்றன.

கடந்த செப்டம்பர் மாத நடுப்பகுதியில் யாழ். அரசடிச் சந்திப்பகுதியில் இடம்பெற்ற 'சகடை'க்குண்டு வீச்சின் போது இந்த அலுவலகமும் சேதமடைந்தது தெரிந்ததே.

அலுவலகத்தின் கூரைப் பகுதி சேதமடைந்துள்ளதால் கடந்த நாட்களில் மழை பெய்த போது அலுவலகத்தினுள் மழை நீர் புகுந்து அங்குள்ள பொருள்கள் பலவும் நனைந்துள்ளன.

ஏற்கனவே பழமையான நிலையில் இருந்த இந்த அலுவலகக் கட்டடம் குண்டு வீச்சின் பின் மேலும் சேதமடைந்துள்ளதால்- தற்போது புதிய இடத்தில் இந்த அலுவலகத்தை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ் பிராந்திய மின் பொறியியலாளர் திரு கணநாதன் தெரிவித்தார் (உ-5)

## புதிய அதிபர்

மானிப்பாய், நவ. 13

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராகக் கடமையாற்றிய திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இக் கல்லூரியின் பழைய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

இராமநாதன் கல்லூரி அதிபராக இதுவரை கடமையாற்றிய திருமதி எஸ். குமாரசாமி பதவி உயர்வுடன் கல்வி அமைச்சுக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (உ-89-90)

## வீடு பார்க்கச் செல்லும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை

வீடு பார்க்கச் செல்லும் பொதுமக்களை படையினர் அடிக்கடி பணயக் கைதிகளாகப் பிடிப்பதால் செருக்கன் சந்திக்கு அப்பாலும் தெற்கே சுருவில் பகுதிக்கு அப்பாலும் செல்ல வேண்டாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊர்காவற்றுறைப் பிரதேசப் பொறுப்பாளர் பொது மக்களை எச்சரித்துள்ளார். (இ-125)

# குடாக்கடலுக்கு மேல் காணப்பட்டது நீண்ட கயிறா அல்லது இரும்புக் கேபிளா?

( XI )

செப்டெம்பர் 13 ஆம் திகதி பண்ணைக் குடாக் கடல் ஊடாக கோட்டையின் பின்புற நிலப்பகுதியை அடைந்த சிப்பாய்களின் ஓர் அணியினர் கோட்டைக்குள் புகுந்து கொள்ள, மற்றொரு பிரிவினர் தென்மேற்குப்பகுதியில் கோட்டை அகழி வெளியே இருந்த சின்னக் கோட்டைக்குள் புகுந்து கொண்டனர்.

இதனையடுத்து அதுவரை காலமும் விடுதலைப் புலிகள் வைத்திருந்த சின்னக் கோட்டை குகைப் பகுதியில் இராணுவத்தினர் காவல் அரண்களை அமைக்கத் தொடங்கினர்.

சின்னக்கோட்டையிலிருந்து தொலைத்தொடர்பு நிலையப் பக்கத்தைப் பார்த்தவாறு, பல காவல் அரண்கள் மண் சாக்குகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

சின்னக்கோட்டைக் குகைச் சுவர்களில் கறுத்த மை அல்லது தார் கொண்டு விடுதலைப்புலிகளைக் குறிப்பிட்டு சிங்களத்தில் - பெரிய எழுத்தில்-சிப்பாய்கள் எழுதியிருந்த வாசகங்கள் [illegible]தும், காயாத நிலையில் இருப்பதையும் பார்த்தேன்.

சின்னக்கோட்டையிலிருந்த சிப்பாய்கள் தனித்தோ அல்லது கோட்டைக்குள் இருந்த சிப்பாய்களின் உதவியுடனோ —கோட்டை பின்பகுதியைச் சுற்றிச்சென்ற கடற்கரை வீதிக்கு — குறுக்காக — சின்னக் கோட்டைக்குப் பக்கத்தில் — மண் மூடைகளைக் கொண்டு ஒரு தடுப்புச் சுவர் அமைத்திருந்தனர்.

இதனால் தொலைத் தொடர்பு நிலையப் பக்கத்தில் இருந்து கோட்டை பின் பகுதியைப் பார்க்கக்கூடிய காட்சி [View] முற்றாக மறைக்கப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

### கோட்டைப் பக்கம் நேரடிப் பார்வை

### கயிறா கேபிளா?

நீண்ட தேடாவளையக் கயிறு போன்று அல்லது இரும்புக் கேபிள் போன்று குடாக் கடல் கரையிலிருந்து கடலின் நீர்மட்டத்துக்கு மேலாக கடலுக்குள் நீண்ட தூரம் சென்றிருப்பதைக் கண்டேன் என்று குறிப்பிட்டேன் அல்லவா!

இந்தக் கயிறு எதற்குப் பாவிக்கப்பட்டது?

[illegible] டக்கடலில் தான் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான பொம்மர் வீழ்ந்தது. அந்த விமானத்தின் சிதைவுகளை மீட்டெடுப்பதற்கு இந்தக் கயிற்றை விடுதலைப் புலிகள் பாவித்திருக்க முடியும். மீட்ட சிதைவுப் பகுதிகள் போக எஞ்சிய கயிறு சும்மா விடப்பட்டிருக்கிறது'' —எனக்குப் பக்கத்தில் நின்ற ஒருவர் கூறினார்.

கயிறு கோட்டைப் பின்புறத்துக்கு பக்கத்தில் வந்து முடிகிறது. கோட்டைக்குள் சிப்பாய்கள் இருக்கத்தக்கதாக- அதன் பின்புறப் பகுதியில்- நின்று கொண்டு விமானச் சிதைவுகளை மீட்கும் முயற்சியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டனரா? அல்லது குடாக் கடலில் சுற்றி வந்து விமானச் சிதைவுகளை மீட்டார்களா? என்னால் ஊகிக்க முடியவில்லை.

நீண்டகயிறு போல காணப்பட்ட அந்தத் தடம் கயிறா அல்லது இரும்புக் கேபிளா என்று நெருங்கிச் சென்று பார்க்க விரும்பினேன்.

ஆனால் அப்பகுதியில் புதைந்து கிடக்கக் கூடிய மிதி வெடி பற்றிய அச்சமும் வானத்தில் கேட்ட விமானச் சத்தமும் குடாக்கரையை நோக்கி முன்னேறவிடாமல் செய்து விட்டன.

அதனால் கோட்டையின் பின் வாசல் புறத்தில் நின்றவாறு அந்தக் கயிற்றை அல்லது கேபிளை பார்த்துக் கொண்டு நின்றேன்.

கோட்டைக்குள் வந்து சேர்ந்த சிப்பாய்கள் குடாக் கடலில் மண்டைதீவுப் பக்கத்தில் தரித்து நின்ற கடற்படைப் படகுகளில் இருந்து சப்ளைகளைப் பெறுவதற்கோ அல்லது கோட்டைக்குள் இருந்த பெறுமதி மிக்க பொருள்களை பெட்டி, பிளாஸ்டிக் கொள்கலன் போன்றவற்றில் அடைத்து படகுகளுக்கு அனுப்புவதற்கோ இந்தக் கயிற்றை அல்லது கேபிளை ஏன் உபயோகித்திருக்க முடியாது?— வெறுமனே கோட்டைத் தடயங்களைக் கண்ணால் பார்த்து அதனை ஊகிக்க முடியவில்லை.

என்னால் ஊகிக்க முடியாமல் போன மற்றைய விடயம்—

கோட்டைக்குள் இருந்த சிப்பாய்கள் தப்பிப் போக வேண்டும் என்று முதலிலேயே திட்டம் தீட்டிச் செயற்பட்டார்களா அல்லது விடுதலைப் புலிகளின் திடீர் தாக்குதலினால் நிலை குலைந்து ஓடித் தப்பினார்களா?

கோட்டைக்குள் கிடந்த தடயங்கள் வெளியிடும் தகவல் தான் என்ன?

(வளரும்)

- கூர்விழியான் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [14550]

### வாங்கலாம், விற்கலாம்

நாள்தோறும் திறந்திருக்கும்: பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா Second Hand Book House, 18/6, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி முன் லேன், யாழ்ப்பாணம். (14720)

### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் கிளை: பிரதான வீதி, மானிப்பாய். (C/5398)

### மல்லிகை வெள்ளி விழா மலர்

படிக்கலாம், பாதுகாக்கலாம் பரிசளிக்கலாம், பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பலாம். உள்ளடக்கச் செழுமைமிக்க மலர் உயர் வகுப்பு மாணவர்களுக்குப் பயனுள்ளது. வேறு புத்தகங்களும் கிடைக்கும். மல்லிகை 234 B, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [14725]

## திருட முயன்றவர் பிடிபட்டார்

தென்மராட்சி, நவ. 13 'லோன்றி' ஒன்றில் திருடுவதற்கு ஓடு பிரித்து அதற்குள் இறங்கியவர், கடை உரிமையாளரினால் பிடிக்கப்பட்டு விழிப்புக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் பளை ரயில் நிலைய வீதியில் இடம் பெற்றது. (இ-117)

## லைடன் றெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பெனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5 - 11 - 90 முதல் ஆரம்பித்துள்ளதுடன், நத்தார் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**லைடன் றெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்**
ஸ்தாபனத்தார்.

[சி-5393]

## Computer Programming

### BASIC Language

சனி, ஞாயிறு வகுப்புகள்
**ஆரம்பம்: 18 - 11 - 1990**
FEES - மாதம் 300/-

மேலும் விபரங்கட்கு:
**School of Business Administration**
16, 3rd Cross Street,
Jaffna.

[சி 5408]

## விண்ணக வாழ்வின் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:
17 - 05 - 1968

அமலன் மடியில்:
13 - 11 - 1988

### டேவிற் அலன் அன்ரன்

'' சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்தில் மறவாதீர்கள் ''

இவரின் ஆன்ம சாந்திக்காக 13 - 11 - 90 இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், சகோதரி,
மைத்துனர், உறவினர்கள், நண்பர்கள்.

42/2, ரெம்பிள் றோட் லேன்,
யாழ்ப்பாணம். (14748)

## 55 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்: 27 | 06 | 1973



தமிழீழ மண்ணில்: 21 | 09 | 1990

செல்வன்
### கனகசபாபதி பரமானந்தன் (கண்ணன்)

எம் அன்புக்கோர் இலக்கணமாய் திகழ்ந்த எம் செல்வமே! அரவணைத்த எல்லோருக்கும் பெருமையுடன் என் பெயர் கண்ணன் என்று சொல்லி பெருமிதம் அடைந்தாய் எம் செல்வமே! தமிழீழம் மலருமென்று தாரகமாய் கொண்ட உன்னை குண்டு என்னும் கொடுங் காலன் கவர்ந்து சென்ற நிகழ்ச்சி கேட்டு தவியாய் தவிக்கின்றோம். என்றாலும் உன்னை எம் தில்லைக் கூத்தனின் திருவடியில் சேர்த்து விட்ட பெருமையுடன் மனம் தேறி நிற்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்;
உனதருமை அம்மா, அம்மம்மா,
அண்ணன், தங்கை,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

நீலிப்பத்தனை,
காரைநகர். (14746)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

# 1991 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01 - 01 - 1991 தொடக்கம் 31 - 12 - 1991 வரையிலான காலப் பகுதிக்குள் கீழ்க்குறிப்பிடப்படும் வியாபாரம், சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 30-11-1990 ஆம் திகதி பிற்பகல் 4 15 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | வியாபாரம் | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆட்டிறைச்சிக்கடை என்.எம்.எஸ் | i | 14,500/- | 1000/- | 50/- |
| 2. | ஆட்டிறைச்சிக்கடை என்.எம்,எஸ் | ii | 14,500/- | 1000/- | 50 - |
| 3. | மாட்டிறைச்சிக்கடை என்.எம்,எஸ் | iii | 55,740/- | 1000/- | 50/- |
| 4. | மாட்டிறைச்சிக்கடை என்.எம்.எஸ் | iv | 53,720/- | 1000/- | 50/- |
| 5. | வாகனம் நிற்பாட்டும் இடங்களில் குத்தகை அறவிடுதல் சேவை | | 18,298/- | 250/- | 25/- |
| 6. | குப்பை கூழங்களை அகற்ற இரட்டைமாட்டு வண்டில்/ உழவு இயந்திரம் பெட்டிஉட்பட வாடகைக்கு வழங்குதல் | | — | 100/- | 50/- |

மேற்படி வைப்புப் பணமும், கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 29 - 11 - 90 ஆம் திகதி நண்பகல் 12.30 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன் படிக்கைகளைக் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும். மேற்படி கட்டணங்கள் இவ் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகராட்சி மன்றம், சாவகச்சேரி,

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி. 08 - 11 - 1990

[சி 5403]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 06 | 09 | 1956



உதிர்வு: 14 | 10 | 1990

### துரைராசா இம்மனுவேல் (ரவி)

கடல்தனில் அவர் செல்வர் மீனுக்கு வலை விரித்திடவே
ஆழ்கடலில் நீ சென்றதேனோ பாசவலைஇங்குவிரித்திட்டு
எம் உயிரே உன்னைத்தேடி இரு கரைதனிலும்
காத்திருந்தோம்
நாள் ஒன்றும் முப்பதுமாய் துயரத்தில் எம்மை
கரைத்திட்டாய்!

உன் ஆன்மா சாந்திபெற இறைவனை
வேண்டி நிற்கும்!

மனைவி, பிள்ளைகள், பெற்றோர்,
சகோதர சகோதரிகள், உறவினர்கள்,

நம். 21, 2ஆம் குறுக்குத் தெரு,
குருநகர், யாழ்ப்பாணம். (14745)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளை மீறக்கூடாது;
# நிபந்தனையுடன் அரசுக்கு கடன்

பாரிஸ், நவ. 13

பாரிஸ் மாநாட்டில் பல நிபந்தனைகளுடனேயே ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு 100 கோடி டாலர் நிதி உதவி வழங்கப்பட்டது.

மனித உரிமைகள் மீறப்படுவதாக வரும் அறிக்கைகளை எடுத்துக்காட்டி, இனிமேல் அப்படி மனித உரிமைகள் மீறப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று நிபந்தனை விதித்துமே பெரிய உதவித்தொகை வழங்கப்பட்டதாகத் தெரிகிறது

இதேவேளை ஸ்ரீலங்காவில் பெரும் பொருளாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய கடுமையான நிபந்தனைகளும் விதிக்கப்பட்டே நிதி உதவி வழங்கப்பட்டது.

100 கோடி டாலர்களில் 80 சதவீதமும் கடனாக வழங்கப்பட்டது 20 வீதம் மட்டுமே உதவித்தொகையாகும். (அ)

# இந்திய அமைச்சரவை வெள்ளிக்குப் பின்னரே!

புதுடில்லி, நவ. 13

இந்திய அரசின் புதிய அமைச்சரவை பற்றிய அறிவிப்பு தாமதமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குப் பின்னரே பிரதமர் சந்திரசேகர் அமைச்சரவை பற்றி அறிவிப்பார் என்று புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

வெள்ளிக்கிழமை நாடாளுமன்றம் கூடும்போது பிரதமர் சந்திரசேகர் நம்பிக்கை கோரும் பிரேரணையைக் கொண்டுவருகிறார்.

அந்த வாக்கெடுப்பில் வெற்றியீட்டிய பின்னரே பிரதமர் சந்திரசேகர் தனது அமைச்சரவையில் இடம் பெறுபவர்களின் பெயர், விவரங்களை அறிவிப்பார் என்று புதுடில்லிச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (ஒ-எ)

## ரூ. 2 லட்சம் முத்திரைகள்

யாழ்ப்பாணம், நவ 13

யாழ்ப்பாண மாவட்ட தபாலகங்களுக்குத் தேவையான சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள் வார இறுதியில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் கொழும்பில் இருந்து முத்திரைகள் ஏதும் இங்கு அனுப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ 3)

## மீனா வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 13

குப்பிளானில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் காயமுற்ற பெண் போராளியான மீனா (கிளிநொச்சி) நேற்று வீரமரணமடைந்தார். (உ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசம்மா திருஞானசம்பந்தர்

திருமதி இராசம்மா திருஞானசம்பந்தர் அவர்கள் 09 - 11 - 90 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திருஞானசம்பந்தரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அரியநாயகம் [நிர்வாக உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை], பரமேஸ்வரி, பாக்கியலட்சுமி, பாலசுப்பிரமணியம் [ஜெயகிருஷ்ணா ஜூவலஸ்], நடராஜா [ஜேர்மனி], நகுலேஸ்வரி, தியாகராஜா [ஜெயகிருஷ்ணா ஜூவலஸ்] ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற கனகரத்தினம் [செட்டியார்], சுப்பிரமணியம் [நில அளவை உதவி அத்தியட்சகர், கெப்பிட்டிகலாவ], மகேந்திரன் [சுகாதார திணைக்களம் யாழ்ப்பாணம்], இராசநாயகி, தெய்வநாயகி, வேதநாயகி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-11-90 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலசுப்பிரமணியம்.
[பாலா]

336 / 24 ராஜா தியேட்டர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (14751)

## திருமதி தாமோதரம்பிள்ளை நாகம்மா

சாவகச்சேரி, கோவிற்குடியிருப்பைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை நாகம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் முன்னைநாள் சாவகச்சேரி சந்தைப் பாதுகாவலர் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், குணரத்தினம், கனகாம்பிகை, சிறீஸ்கந்தராசா, இராசநாயகம் [கிருபோஸ் கூல்பார், சாவகச்சேரி], செந்தில்வடிவேல் ஆகியோரின் அருமைத் தாயாரும், K. V. மகேந்திரன் [நியூ செந்தில் பிறின்றேஸ், சாவகச்சேரி], பவானிதேவி, நாகேஸ்வரி, மனோறஜனி, கருணாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், அருந்ததி, பிரணவராசா, சண்முகராசா, பரம்தில்லைராசா, செல்வக்குமார், கலாநிதி, கேமலதா, ஜமுனா, பிரபாஜினி, சண்முகதர்ஷன், சேயோன், கிருத்திகா, லாவண்யா, கார்த்திகா, காண்டீபன், லத்தீபன் ஆகியோரின் அருமைப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் கச்சாய் வீதி, "லாவண்யம்" இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று [13-11-1990] செவ்வாய்க்கிழமை கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தா. இராசநாயகம்
(14291)

# அடக்க ஆராதனை

## பாஸ்டர் ஏ. ஜோன்

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று 13-11-90 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இலங்கை பெந்தெகொஸ்தே சபை, கண்டுக்குளி விசுவாச வீட்டில் நடைபெறும்.

அன்னாரின் பூதவுடல் இன்று நல்லடக்கத்திற்காக கொழும்பிலுள்ள எமது தலைமை ஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை சபையாருக்கு அறியத் தருகிறோம்.

இலங்கை பெந்தெகொஸ்தே சபை,
111, கண்டி வீதி,
கண்டுக்குளி.

தகவல்:
சகோதரன்
A. மகேந்திரன்.

(14752)

### ராமர் ஆலய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சந்திரசேகரைச் சந்தித்துப் பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் சம்பந்தமாக விஸ்வ இந்து பரிஷத்தும், இந்து மதத் தலைவர்களும் இணைந்து நேற்று விடுத்த அறிவிப்பில்-

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட ஒரு லட்சம் பேர் சேர்க்கப்படவுள்ளனர் என்றும்-

அவர்களுக்கு விசேட பயிற்சி அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

### 8 மாதங்களுக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகுதிதானும் இன்னும் அனுப்பப்படவில்லை.

அதனாலேயே மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக போதனா ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டால், நோயாளர்களுக்கு முழு அளவில் மருந்துகளை வழங்க முடியாதுள்ளதாக ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று ஆஸ்பத்திரியில் டாக்டர்களால் வழங்கப்பட்ட மருந்துத் துண்டுகளுக்கு உரிய முழு மருந்தும் நோயாளருக்கு வழங்கப்படவில்லை. அரை குறையாகவே வழங்கப்பட்டது. (அ-3)


விளம்பரதாரருக்கு வேண்டுகோள்

உங்கள் விளம்பரங்கள் உரிய திகதியில் வெளி வருவதற்கு-

ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு -

கடைசி நாள் வரை காத்திராமல்,

மூன்று, நான்கு தினங்களுக்கு முன்னரே உங்கள் விளம்பரங்களை எங்கள் கருமபீடத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

-நிர்வாகத்தினர்.

உதயன்


# தண்ணீர் கேட்டு தாவரங்களும் அழும்!

வாஷிங்டன். நவ. 13

தண்ணீர் தாகம் வந்ததும் தாவரங்கள் கேவிக் கேவி அழுகின்றனவாம்!

நம்புவதற்குக் கஷ்டமாக உள்ளதா?

மனிதர்களும், மிருகங்களும் பசி வந்ததும் அழுகிறார்கள். அதுபோலவே தாவரங்களும் தண்ணீர் தாகம் வந்ததும் ஒரு வித ஒலியை எழுப்புகின்றன.

அந்த ஒலி எங்கள் காதுகளுக்குக் கேட்பதில்லை. அந்த அழுகை ஒலியைப் பதிவு செய்யக் கூடிய ஒரு கருவியை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அந்தக் கருவிகள் வர்த்தக ரீதியில் உற்பத்தியாகத் தொடங்கியதும், தாவரங்கள் தண்ணீருக்கு அழுததும் தண்ணீர் ஊற்ற முடியும்.

சங்கீதம் கேட்டு தாவரங்கள் வளர்வது பழைய சங்கதி; அவை தண்ணீர் கேட்டு அழுவது புதிய செய்தி! (அ)

# குவைத்திலிருந்து வந்தோரின் விவரம் செயலகத்திலும் பதிவு

யாழ்ப்பாணம், நவ. 13

குவைத், ஈராக் ஆகிய நாடுகளில் இருந்து வெளியேறி வந்தவர்களின் விவரங்கள் நேற்று யாழ். செயலகத்திலும் பதிவு செய்யப்பட்டன.

சம்பந்தப்பட்டவர்களுக்கு தகுந்த உதவிகளைப் பெற்றுக் கொடுக்கவே அவர்களது விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குவைத், ஈராக்கில் இருந்து வந்தவர்களின் விவரங்கள் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினாலும் சேகரிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

அங்கும் நேற்றுப் பலர் தமது விவரங்களைப் பதிவு செய்தனர். (ஒ-3)

## டாக்டர்கள் குழு கொழும்புக்கு

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ். போதனா ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் செல்வி புஷ்பம் சண்முகம் தலைமையில் டாக்டர்கள், அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று கொழும்பு சென்றுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி சம்பந்தப்பட்ட பல அவசர, அவசிய விடயங்கள் குறித்து, இந்தக் குழு அங்கு பேச்சுக்களை நடத்தும் என அறியவருகிறது. [ஒ 3]

## நாளை கூட்டம்

யாழ்- பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மருத்துவ பீடத்தில் நடைபெறும். (ஒ)

### தமது முடிவை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதுகுறித்துக் கருத்து வெளியிடுகையில் முதல்வர் கருணாநிதி மேலும் தெரிவித்ததாவது:—

யாரையோ திருப்திப்படுத்த ராஜீவ் காந்தி இக்குற்றச்சாட்டை வெளியிட்டிருக்கிறார். அவரின் பாட்டனார் நேருஜியின் பெயருக்கு களங்கம் ஏற்படும் விதத்தில் ராஜீவ் பேசியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கு கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான ஆயுதங்களுடன் பயிற்சியும் ராஜீவ்காந்தி வழங்கியது உலகுக்கே தெரியும் என்றார் (அ-எ)

## நுண்கலை பீட கூட்டம்

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம், நுண்கலைப் பீடத்தின் அனைத்து மாணவர்களுக்காக ஏற்பாடு செய்துள்ள பொதுக் கூட்டம் ஒன்று நாளை (புதன்கிழமை) காலை 9. 30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாசாரப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)


★ ஜெயா பென்சி ஹவுஸ் ★

எமது ஸ்தாபனம் மீண்டும் பழைய இடத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

160, நியூ மார்க்கெட்,
யாழ்ப்பாணம்.

(14744)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org